(iv) ஒவ்வொரு கேள்விக்காரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்கவேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவுத் தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனைத் தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப்பணம், நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச்செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான முத்திரைகள் கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2013.11.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் மீள விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

எஸ். பீ. கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2013.07.03.

**அட்டவணை**

**வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள்**

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| இல. 01, நுவரெலியா | நுவரெலியா மாநகர சபை இல. 06 பிரிவிற்குள் | 2013.09.11 | மு. ப. 10.30 | ரூ. 5,000 |

7-661

---

**மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2014**

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2014, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2014, திசெம்பர் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

(ii) மதுபானம் வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்களுக்கு செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகை காலத்தில் செல்லுபடியானதாக

இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடி காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது முன்னளித்தல் வேண்டும் :-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்தும் ;

(ஆ) கொழும்பு 02, ஸ்ரேப்பிலர் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்தும் ;

(இ) கொழும்பு மதுவரி சபை அலுவலகத்திலிருந்தும்.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

"மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் - 2014"

18.09.2013 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளைக் கைச்சாத்திட அல்லது குறிக்கப்பட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) இலக்கம் | (ஆ) பிரிவு | (இ) பிரதேச மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | (ஈ) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (உ) மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஊ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | (எ) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் திகதி | (ஏ) விற்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகரசபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலி பாதை யின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு. ப.11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு.ப. 10.30 | 2013.09.18 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **முக்கியம்.**- 2013.09.18 ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2013.11.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடி குத்தகையில் விற்கப்படும்.

கே. சீ. நிரோசன்,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

மொறட்டுவை பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2013.06.17.

7-728

---

## கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகை விற்பனை - 2014

1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டு மற்றும் அதன் பிற்காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை சட்டதிட்டங்களுக்கு அமையவும், இக்காலத்தில் செல்லுபடியாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது விற்பனைவரி சட்ட திட்டங்களுக்கு அமையவும், மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்கான தெல்தோட்டை பிரதேச செயலாளர் மேலதிக அரசாங்க அதிபரான என்னால் 2013.08.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்வியிலும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்பட வேண்டியதுடன்,

(அ) கேள்வி முற்பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திட்டமான கேள்வி பிணைத் தொகையை வைப்பில் இட்டு அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் ;

(ஆ) கேள்வியாளரின் சொத்துக்கள், அவை அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

3. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில் அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படவேண்டுமென்று கேள்வி முன்வைப்போரிடத்தில் மிகக்கடுமையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்வியாளர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) கேள்விப்பத்திரத்தை முழுமையாக பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும்போது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுதுதல் வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப்பத்திரத்தில் சாட்சியாளரின் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும் ;

(iii) மாற்றங்கள் செய்யும் அனைத்திலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்வியாளர்களின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தியிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்கு முரணாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. முறையாக முன்வைக்கப்படுகின்ற கேள்விப்பத்திரம் :

(அ) பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு :

(ஆ) சொத்து விபரம் தொடர்பான அத்தாட்சி.

ஆகியவற்றுடன் கடித உறையொன்றிலிட்டு முத்திரையிட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "தவறணை இலக்கமும் பெயரும்" குறிப்பிடப்பட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி முடிவு நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தெல்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்ளப்படுவது முடிவடையும் நேரம் மேலே குறிப்பிட்டுள்ள 1 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்வியாளர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.

6. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்வியாளர் "சிறப்புரிமைகளை வாங்கியவர்கள்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக தெல்தொட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் நிபந்தனைக் கொத்தில் கையொப்பமிட வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 'கொடுப்பனவுக்காக' குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ வழங்கப்பட்ட 'பாதுகாப்புக்கான காசோலை' என அழைக்கப்படும் காசோலை ஒன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கள்ளுத் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களை உடைய மறு வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய்க்கணக்கில்) கள்ளுக் குடிவகைகள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்திற்கொள்ளவும்.

8. தற்போது வெளிநாட்டு மதுபான விற்பனை செய்யும் குறிப்பிட்ட இடத்தில் தொடர்ந்தும் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பிரச்சினைகள் அற்ற பொருத்தமான இடத்தை தெரிவுசெய்வது குத்தகைக்காரரின் கடமையாகும்.

9. பாதுகாப்பு காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்றதாலோ வேறு ஏதும் காரணங்களினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக மூடிவிடுவதற்குரிய கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

10. அதற்கு முன்னர் வெளிநாட்டு மதுபானசாலையொன்றை நடாத்திச் சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்க வேண்டியிருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

11. மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஜே. பீ. யூ. கே. ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தெல்தோட்டை,
2013, யூலை 05.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணை பட்டியல் - 2014**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கப்படும் நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபானசாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவிற்குள் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரையும் பி.ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2013.08.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

வெளிநாட்டு மதுபான தவறணையின் குத்தகை விற்பனைக்கான சேமிப்பாக வைக்கப்படவேண்டிய தொகை ரூபா 1,000 ஆகும்.

7-791

# ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி – குளியாபிட்டி கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

**பிரசித்த சொத்து ஏல விற்பனை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலாளர் பிரிவு மெதபத்துவ கிழக்கு கோரலை, கொந்துருவாவல என்ற கிராமத்தில் அமைந்துள்ள 'வெலிகெட்டிய மூக்கலான, தெல்கொல்ல மூக்கலான' என்ற காணிக்கு 6 ஆம் இலக்க வெளிக்கல பத்திரத்தின் க. கி. ப. 347 ஆம் இலக்க காணியை துண்டு போட்ட வரைபடத்தின் 237 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை மற்றும் கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக

(பரப்பளவு : ஹெக்டெயர் 0.155)

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் என்னால் இக்காணி 2013.08.15 ஆந் திகதி

மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2000.05.12 ஆந் திகதிய ''தினமின'', 2000.09.06 ஆந் திகதிய ''டெயிலி நியூஸ்'', ''தினகரன்'' பத்திரிகைகளிலும் 2000.09.06 ஆந் திகதிய அரச வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ள ஏலவிற்பனை அறிவித்தலுக்கு உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- குளியாபிட்டிய-பன்னல பாதையில் 8 கிலோ மீட்டர் அளவு சென்று பரகம்மன சந்தியால் ஹமன்கல்லன பாதையில் 7 கிலோ மீட்டர் அளவு சென்றவுடன் அகப்படும் ஹமன்கல்லயைத் தாண்டி மேலும் 3 கிலோ மீட்டர் அளவு சென்றவுடன் வனமன்தாவ விஹாரையின் அருகால் இடதுபக்கம் திரும்பியவுடன் வலது பக்கமாக குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும் :-

(1) வாங்கிய விலையின் 10% ;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% ;
(3) ஏலவிற்பனைக் கமிஷனாக விற்பனை விலையின் 2 1/2% ;
(4) எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவுகள், வேறும் கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம் ;
(6) விற்பனை அத்தாட்சிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

வாங்கிய விலையின் மிகுதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் குருநாகல் பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளரிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 037-2222670, 037-2222572, 037-2222400 ; பெக்ஸ் இலக்கம் : 037-2222400.

உரிமைப்பத்திரம் வேறு விபரங்களை மேற்கண்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% க்கான பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல,
நீதிமன்ற ஆணையாளர், அதிகாரம்பெற்ற
ஏலவிற்பனையாளர், மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள்
வர்த்தக கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 071-8125581.

7-813

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0054 5000 0185 - பீ. டீ. ஜயமான்ன, யூ. ஜீ. சீ. டீ. கருணாரத்ன

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2010.08.04 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.09.17 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.09.03 ஆந் திகதிய ''திவயின'', ''ஜலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினேழு இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்றெண்பத்தி ரண்டு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 17,04,782.19) 2010, மே 14 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூற்றுநாற்பத்தேழு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 13,57,547.41) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) மேலும் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா (ரூ. 2,30,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணை யாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப் பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2013.08.23 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிரவேட்களுக்குள் வட்டரக்க கிராமத்தில் அமைந்த ''வட்டரக்க எஸ்ட்டேட்'' என்றழைக்கப் படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. சிரிவர்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 109 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : அயலவர்கள் உரிமை கோரும் காணி ; கிழக்கிற்கு : லொட் 2ஏ இன் லொட் 2டீ ; தெற்கிற்கு : லொட் 56 (பிரவேச வழி) மற்றும் அதே காணியின் லொட் 108 ; மற்றும் மேற்கிற்கு : லொட் 56 (பிரவேச வழி) மற்றும் அதே காணியின் லொட் 110. இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்மூன்று தசம் மூன்று சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 13.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப்பதிவ கத்தில் பரிமாணம்/பக்கம் ஏ593/213 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வட்டரக்க கிராமத்தில் அமைந்த ''வட்டரக்க எஸ்ட்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு இல. 46/1999 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள்

நிர்ணயிக்கப்பட்டு லொட் 110 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : அயலவர்கள் உரிமை கோரும் காணி மற்றும் லொட் 111 ; கிழக்கிற்கு : அயலவர்கள் உரிமம்கோரும் காணி மற்றும் அதே காணியின் லொட் 109 ; தெற்கிற்கு : அதே காணியின் லொட்கள் 109 மற்றும் 56 ; மற்றும் மேற்கிற்கு : அதே காணியின் லொட் 111. இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் சைபர் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.04பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஏ/593/214 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 13 மற்றும் 56 இன் ஊடாகவும் அதன் மீது பிரவேசிப்ப தற்கான மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-850

---

## பிரதேச அபிவிருத்தி வங்கி

(முன்னர் வயம்ப அபிவிருத்தி வங்கி என அழைக்கப்பட்டது)

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 43 ஆம் பிரிவுக்கமைய தற்போது 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 40 ஆம் பிரிவின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், கலேவெல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கந்தபல்ல கோரளே, தலகிரியாகம கிராம சேவகர் பிரிவின் தலகிரியாகமயில் அமைந்துள்ள கிரலகொல்ல என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் கே. கே. கனகசபை அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 938 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு (மேற்குறிப்பிட்ட காணி நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட எப். வீ. பீ. 401 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 429 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 2 றூட் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.)**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 2றூ. 0பே.)**

**அதில் அமைந்துள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக**

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2003, மாச்சு மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும் 2003, யூன் 26 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஏலதாரரை மாற்றம் சம்பந்தமான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2011, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும் 2011, மாச்சு மாதம் 30 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- குருநாகல் நகரிலிருந்து தம்புள்ள வீதியாக சுமார் 48 கிலோ மீட்டர் வரை கல்கிரியாகம சந்தியைத் தாண்டி தம்புள்ளை நோக்கிச் சென்று, அங்கிருந்து 82/1 ஆவது மைல் கல் வரை சென்று, அங்கிருந்து வலது பக்கத்தில் இருக்கும் எத்தாபன்டிவெவ வழியாக கிறவல் வீதிக்குத் திரும்பி, ஒரு கிலோ மீட்டர் வரை சென்றதும் குறிப்பிட்ட ஆதனம் இடதுபக்கத்தில் காணப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% (இருபத்தைந்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் "வலய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமேல் மாகாண அலுவலகம், இல. 155, நீர்கொழும்பு வீதி, குருநாகல்" என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கங்கள் : 037-2227567, 037-2227429, 037-2234350, 037-2234360 ; தொலைநகல் இல. : 037-2220013.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
121 வருடகால சேவை அனுபவம்.

*தலைமை அலுவலகம் :* *நகர அலுவலகமும் காட்சியறையும் :*

*24, டொரிங்டன் வீதி, கண்டி.* *290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.*

*தொலைபேசி : 081-2227593* *தொலைபேசி : 011-2502680, 011-2585408*

*தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371* *தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176*

*மின்-அஞ்சல் :* schokmankandy@sltnet.lk *மின்-அஞ்சல் :* schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

*7-801*

---

**செலான் வங்கி பீஎல்சீ – மிலேனியம் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*('கடன்பட்டோர்' என்ற வகையில் கண்டியில் (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட இல. பீவீ 11999) இலங்கையில் பதிவு இல. என்(பீவீஎஸ்) 5313 இன்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள கண்டி டயர் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

**ஏல விற்பனை**

**முதலாவது அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொரளை வடக்கு வட்டாரத்தில் (வரிமதிப்பீட்டு இல. 1089, மருதானை வீதி) அமைந்துள்ள தற்போதைய வரிமதிப் பீட்டு இல. 29, ஞானார்த்த பிரதீப வீதி, இதில் ஒரு பகுதியான துண்டு XIA காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் வீ. சீதாசபேசன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 10, செத்தெம்பர் 1990 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1099 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு XIA என அடையாள மிடப்பட்ட காணி மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 1099 இற்கமைய துண்டு XIA ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

**காணிக்குச் செல்லும் விதம்.-** பொரளை சந்தியிலிருந்து மருதானை வீதியினால் மருதானை நோக்கி பேராயர் இல்லம் வரை சென்றால் பேராயர் இல்லத்திற்கு எதிராக வலதுகை பக்கத்தில் குறிக்கப்பட்ட காணி அமைந்திருக்கும்.

**இரண்டாவது அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் வரிமதிப்பீட்டு இல. 1089, மருதானை வீதி, கொழும்பு 10 இல் உள்ள வளாகத்தில் அமைந்துள்ள ஒற்றை வர்த்தகத்தின் அதன் மீது வைக்கப்பட்டுள்ள (கடன்பட்டோரின் வியாபாரக் கையிருப்பு, பொருட்கள் முடிக்கப்பட்ட முடிவுபெறாத பொருட்கள் என இதன் பின்னர் கூட்டாகக் குறிப்பிடப்படுகின்ற அனைத்தும்) இயந்திரங்கள், உபகரணங்கள், பிரிஜர்ஸ்டோன் டயர், தங்க முத்திரை பதிக்கப்பட்ட பட்டரிகள் மற்றும் அனைத்து ஆவணங்கள் மற்றும் தளபாடங்கள், பொருத்தல்கள் மற்றும் பொருட்கள் மற்றும் அசையக்கூடிய சொத்துக்கள் மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் இப்பொழுது கடன்பட்டோர் எல்லாவற்றிலும் அல்லது எந்தவொரு வேளையிலும் அத்துடன் காலத்திற்குக்காலம் இதன் பின்னர் வியாபாரக் கையிருப்பு சாதனங்கள், முடிக்கப்பட்ட முடிவுபெறாத கடன்பட்டோரின் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள், ஏனைய அசைவடையக்கூடிய சொத்துக்கள் முடிக்கப்பட்ட முடிவுபெறாத பொருட்கள், நடைபெற்று வருகின்ற வியாபாரம் அல்லது வர்த்தகம் அல்லது களஞ்சியம் முதலியன.**

**பிரிஜ்ஸ்டோன் டயர் மற்றும் ஹோல்ட் சீல் பட்டரி கொண்ட அனைத்தும் மற்றும் ஒருமை வஸ்த்துக்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான அனைத்து பிற பொருட்கள்.**

**மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகராட்சியின் துறைமுக களஞ்சியசாலையில் ஏற்றி இறக்கும் பிரிவில் முடங்கியிருக்கும் பொருட்கள் (துறைமுக களஞ்சியசாலையின் தேங்கியிருக்கும் கடன்பட்டோரின் பொருட்கள்) என குறிப்பிடப் படுகிறது.**

**பிரிஜ்ஸ்டோன் டயர் மற்றும் ஹோல்ட் சீல் பட்டரி கொண்ட அனைத்தும் மற்றும் ஒருமை வஸ்த்துக்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான அனைத்து பிற பொருட்கள்.**

**மேல் மாகாணத்தில் நீர்கொழும்பு மாவட்டத்தில், கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சியசாலையில் முடங்கியிருக்கும் பொருட்கள் (விமான நிலைய களஞ்சியசாலையில் தேங்கியிருக்கும் கடன் பட்டோரின் பொருட்கள்) என குறிப்பிடப்படுகிறது.**

**மூன்றாவது அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் வரிமதிப்பீட்டு இல. 1087, மருதானை வீதி, கொழும்பு 10 இல் உள்ள வளாகத்தில் அமைந்துள்ள ஒற்றை வர்த்தகத்தின் அதன் மீது வைக்கப்பட்டுள்ள (கடன்பட்டோரின் வியாபாரக் கையிருப்பு பொருட்கள் முடிக்கப்பட்ட முடிவுபெறாத பொருட்கள் என இதன் பின்னர் கூட்டாகக் குறிப்பிடப்படுகின்ற அனைத்தும்) இயந்திரங்கள், உபகரணங்கள், ஃபயர்ஸ்டோன், நேன்கெங் மற்றும் டேர்பில் புள்ளி டயர்ஸ் மற்றும் அனைத்து ஆவணங்கள் மற்றும் தளபாடங்கள், பொருத்தல்கள் மற்றும் பொருட்கள் மற்றும் அசையக்கூடிய சொத்துக்கள் மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் இப்பொழுது கடன்பட்டோர் எல்லாவற்றிலும் அல்லது எந்தவொரு வேளையிலும் அத்துடன் காலத்திற்குக்காலம் இதன் பின்னர் வியாபாரக் கையிருப்பு சாதனங்கள், முடிக்கப்பட்ட முடிவுபெறாத கடன் பட்டோரின் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள், ஏனைய அசையக்கூடிய சொத்துக்கள் முடிக்கப்பட்ட முடிவுபெறாத பொருட்கள், நடைபெற்று வருகின்ற வியாபாரம் அல்லது வர்த்தகம் அல்லது களஞ்சியம் முதலியன.**

**ஃபயர்ஸ்டோன், நேன்கெங் மற்றும் டேர்பில் புள்ளி டயர்ஸ் மற்றும் அனைத்து மற்றும் ஒருமை வஸ்த்துக்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான அனைத்து பிற பொருட்கள்.**

**மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகராட்சியின் துறைமுக களஞ்சியசாலை மற்றும் ஏற்றி இறக்கும் பிரிவில் முடங்கியிருக்கும் பொருட்கள் (துறைமுக களஞ்சியசாலை தேங்கியிருக்கும் கடன்பட்டோரின் பொருட்கள்) என குறிப்பிடப் படுகிறது.**

**ஃபயர்ஸ்டோன், நேன்கெங் மற்றும் டேர்பில் புள்ளி டயர்ஸ் கொண்ட அனைத்து மற்றும் ஒருமை வஸ்த்துக்கள், இயந்திர**

***சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான அனைத்து பிற பொருட்கள்.***

***மேல் மாகாணத்தில் நீர்கொழும்பு மாவட்டத்தில், கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சியசாலையில் முடங்கியிருக்கும் பொருட்கள் (விமான நிலைய களஞ்சியசாலையில் தேங்கியிருக்கும் கடன் பட்டோரின் மற்றும் பொருட்கள்) என குறிப்பிடப்படுகிறது.***

*மேலே விவரிக்கப்பட்ட இயந்திரங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்களை அதே இடத்தில் 2013, ஓகத்து 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

**இரண்டாம் ஏல விற்பனை**

**நான்காவது அட்டவணை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் வரிமதிப்பீட்டு இல. 205, அவரிவத்த றோட், வத்தளையில் உள்ள வளாகத்தில் அமைந்துள்ள ஒற்றை வர்த்தகத்தின் அதன் மீது வைக்கப்பட்டுள்ள (கடன் பட்டோரின் வியாபாரக் கையிருப்பு, பொருட்கள் முடிக்கப்பட்ட முடிவுபெறாத பொருட்கள் என இதன் பின்னர் கூட்டாகக் குறிப்பிடப்படுகின்ற அனைத்தும்) இயந்திரங்கள், உபகரணங்கள், டயர்கள் மற்றும் அனைத்து ஆவணங்கள் மற்றும் தளபாடங்கள், பொருத்தல்கள் மற்றும் பொருட்கள் மற்றும் அசையக்கூடிய சொத்துக்கள் மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் இப்பொழுது கடன்பட்டோர் எல்லாவற்றிலும் அல்லது எந்தவொரு வேளையிலும் அத்துடன் காலத்திற்குக்காலம் இதன் பின்னர் வியாபாரக் கையிருப்பு சாதனங்கள், முடிக்கப்பட்ட முடிவுபெறாத கடன் பட்டோரின் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள், ஏனைய அசைவடையக்கூடிய சொத்துக்கள் முடிக்கப்பட்ட முடிவுபெறாத பொருட்கள், நடைபெற்று வருகின்ற வியாபாரம் அல்லது வர்த்தகம் அல்லது களஞ்சியம் முதலியன.***

***டயர் மற்றும் ஒருமை வஸ்துக்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான அனைத்து பிற பொருட்கள்.***

***மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகராட்சியின் துறைமுக களஞ்சியசாலையில் ஏற்றி இறக்கும் பிரிவில் முடங்கியிருக்கும் பொருட்கள் (துறைமுக களஞ்சியசாலை தேங்கியிருக்கும் கடன்பட்டோரின் பொருட்கள்) என குறிப்பிடப் படுகிறது.***

***டயர் மற்றும் ஹோல்ட் ஒருமை வஸ்த்துக்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான அனைத்து பிற பொருட்கள்.***

***மேல் மாகாணத்தில் நீர்கொழும்பு மாவட்டத்தில், கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சியசாலையில் முடங்கியிருக்கும் பொருட்கள் (விமான நிலைய களஞ்சியசாலையில் தேங்கியிருக்கும் கடன் பட்டோரின் பொருட்கள்) என குறிப்பிடப்படுகிறது.***

*மேலே விவரிக்கப்பட்ட இயந்திரங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்களை அதே இடத்தில் 2013, ஓகத்து 16 ஆந் திகதி மு. ப. 11.45 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** *- 2013.04.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2013.05.02 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் 2013.04.12 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- *வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :*

*(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகாரசபை வரி விதிகளுக்கமைய 1% (ஒரு வீதம்) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்பட வேண்டும், (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.*

*மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.*

*காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456473, 2456475.*

*துசித கருணாரத்ன (ச. நீ.),*
*அனுமதிபெற்ற ஏலதாரர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*ரி. அன்ட் எச். ஒக்சன்,*
*இல. : 50/3, விஹார மாவத்தை,*
*கொலொன்னாவ.*
*தொலைபேசி : 011-3068185, 011-2572940.*

*7-817*